6th August 1966]

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The matter is under examination.

திரு. வை. சங்கரன்: குறிப்பாக சில முனிசிபாலிட்டிகள் தாங்களே கல்விக்காக பூராவும் செலவழித்து இந்தப் பள்ளிக் கூடங்களை நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். அவர் களுக்கு இவ்வளவு வேண்டும், இவ்வளவு தேவை என்பதைத் தெரிந்து, அரசாங்கம் சீக்கிரம் இந்த மான்யத்தை அளிக்க நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி

*184 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1966 பிப்ரவரி 12, 13 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) Rs. 5,856.

திரு. து. ப. அழகமுத்து: இந்த விளையாட்டுப் போட்டி நடத் தப்பட்டபொழுது விவசாயக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. அதற்கான செலவு எவ்வளவு என்று கூறமுடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை.

Unsold books with Bureau of Tamil Publications

*185 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state the value of the books in Tamil including translations and original works lying unsold with the Bureau of Tamil Publications set up by the Government of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The value of the books in Tamil including those released on 14th April 1966 in stock with the Bureau of Tamil Publications, is Rs. 10,02,745.50.

திரு. சா. கணேசன்: இம்மாதிரி அறிவியல் நூல்களை அச்சிட் டதும் முழுவதும் விற்றுவிட முடியாது என்பதும், பல வருஷங் களும் தொடர்ந்து படித்து வரும் மாணவர்களால் வாங்கப்பெற வேண்டிய காரணம் இருப்பதினாலே இவைகளை விற்பதற்குக் கால தாமதம் ஆகும் என்பதையும் கருதி, இத்தகைய வெளியீடுகளில்